68—

சுரங்கப்பாதையை சீர்படுத்துதல்

***24175—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோயில் முதல் திருமலை நாயக்கர் மஹால் வரை சுரங்கப்பாதை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து திருமலை நாயக்கர் மஹால் வரை எவ்வித சுரங்கப்பாதையும் இல்லை. எனவே அதைச் சீர் செய்யும் அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை திருமலை நாயக்கர் மஹாலிலிருந்து மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வரை சுரங்கப்பாதை உள்ளதாக நீண்ட நெடுங்காலமாக கருத்து உள்ளது. திருமலை நாயக்கர் மஹாலில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சுரங்கப்பாதை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல்கிறது என்று மக்கள் இப்போதும் நம்புகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமலை நாயக்கர் மஹாலில் உள்ள இடத்தைப் பார்வையிட்டு சுரங்கப்பாதை இருப்பதை உறுதி செய்ய இயலுமா என்பதையும், அவ்வாறு இருந்தால் சுரங்கப்பாதையை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. திரு. பொன்னம்பலம், நாம் கண்டுபிடித்துச் சொல்வோம். அதற்கு அப்புறம் எடுக்கச் சொல்வோம்.

வினா எண் 69, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.